بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 02, May 2014 (Tamil)

## இறையன்பு, இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிமுறைகள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

நான் சென்ற ஜுமுஆ உரைகளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளை சான்றாகக் கொண்டு இறைஞானத்தைப் பெறுவதற்கான வழிமுறை, இறையன்பைப் பெறுவதற்கான வழிமுறை அல்லாஹ் பற்றிய உண்மைத்துவம் ஆகியவற்றிப் பற்றி கூறி வந்துகொண்டிருக்கிறேன். இன்று அன்னார் (அலை) அவர்களின் மேற்கோள்களை எடுத்துக் கூறியவாறு இறைநெருக்கத்தின் உண்மை நிலை, அதைப் பெறுவதற்கான வழிமுறை அதன் முக்கியத்துவம் மற்றும் அவற்றைப் பெறுவதற்காக தமது ஜமாஅத்தில் அன்னார் வைத்திருந்த நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்ட அன்னாரின் அறிவுக் கருவூலங்களிலிருந்து சில சான்றுகளை எடுத்துரைப்பேன். அல்லாஹ்வைப் பெற வேண்டுமென்றால், உண்மையான நன்மை என்பது இறைவனிடம் உள்ளது. மேலும் அவனிடமிருந்தே நன்மை வருகின்றது. அது இறைவனுடைய போதனையை கடைபிடிப்பதனாலேயே கிடைக்கின்றது. அதன் விளைவாக இறைவனுடைய அருளும் அவனுடைய நெருக்கமும் கிடைக்கின்றது. இதைப் பற்றி விளக்கியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

‘‘உண்மையில் இறைவனைத் தவிர வேறு யாரும் நல்லவர் இல்லை. எல்லா சிறப்பான பண்புகளும் எல்லா நன்மைகளும் அவனுக்கே உரியன என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். பிறகு எந்த அளவுக்கு ஒருவர் தனது மன விருப்பதையும், எண்ணங்களையும் விட்டு அகன்றவாறு தன்னை மாய்த்துக் கொண்டவாறு, நன்மையாகத் திகழும் அந்த இறைவனின் நெருக்கத்தைப் பெறுகிறாரோ அதே அளவுக்கு நல்லொழுக்கங்கள் அவருடைய உள்ளத்தில் பிரதிபலிக்கின்றன. எனவே இறையடியாருக்கு கிடைக்கின்ற மேன்மைகள், உண்மையான நாகரிகங்கள் இறைநெருக்கத்தினாலேயே கிடைக்கின்றது. அவ்வாறே கிடைக்கவும் வேண்டும். ஏனெனில் படைப்பினம் தனது சொந்த வகையில் பார்க்கும்போது ஒன்றுமே அல்ல. எவர்கள் திருக்குர்ஆனை முழுமையாகப் பின்பற்றுகின்றார்களோ அவர்களின் உள்ளத்தில்தான் இறைவனின் உயர்ந்த நற்பண்புகள் பிரதிபலிக்கின்றன.’’

இறைநெருக்கத்தைப் பெறுவதற்கான வழிமுறையைப் பற்றி இன்னோரிடத்தில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

‘‘ இறைவன் ஏமாறக் கூடியவன் அல்லன். எவர்கள் மீன்களைப் போன்று இறைநேசம் எனும் ஆற்றில் எப்பொழுதும் இயல்பாகவே நீந்தக் கூடியவர்களாக இருக்கின்றார்களோ, அவனுக்காகவே ஆகி விடுகின்றார்களோ, அவனுக்குக் கட்டுப்படுவதிலேயே தன்னை மாய்த்துக் கொள்கிறார்களோ அவர்களையே இறைவன் தனது சிறப்பான நேசத்திற்குரியவர்களாக ஆக்குகின்றான். இறைவன் தன்னை நேசிப்பவர்களை தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கிறான் என்பது அவனுடைய நடைமுறையாகும். உண்மையான தூய்மை, தூய்மையின் நீரூற்று இறைவனே ஆவான். எவர்கள் இறைவனை நினைவு கூறுதல், இறைவனை வணங்குதல் மற்றும் அவன் மீது கொண்ட அன்பினால் அவனை நினைத்துப் பார்த்தல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றார்களோ இறைவன் அவர்கள் மீதும் தனது பண்புகளை இட்டுவிடுகின்றான். அப்போது அவர்களும், இறைவனிடம் உண்மையான முறையில் காணப்படுகின்ற அந்தத் தூய்மையிலிருந்து நிழலாக பங்கைப் பெறுகின்றனர்.’’

மேலும் இந்த நற்பண்புகள், நன்மைகள், இறைநெருக்கம் ஆகியவற்றைப் பெறுவதற்கு இறைவன் வைத்துள்ள ஊடகம், முன்மாதிரி, போதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முற்றிலுமாக பின்பற்றுவதாகும். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

**‘‘ நமது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் நேர்வழியின் மிகக் குறைந்த படித்தரம் கூட மனிதனுக்கு ஒருபோதும் கிடைக்க முடியாது என்பது நமது ஈமான் ஆகும். அப்படி இருக்கும்போது** அப்படி இருக்கும்போது இறைதூதர்களின் இமாம் (ஆகிய அந்த நபி) ஐ பின்பற்றாமல் நேர்வழியின் **உயர்ந்த படித்தரங்களை எவ்வாறு பெற முடியும்?** ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நாம் உண்மையானவும் முழுமையாகவும் பின்பற்றாமல் எந்தவொரு சிறப்பையும் மேன்மையையும், எந்தவொரு அந்தஸ்தையும் நெருக்கத்தையும் நாம் ஒருபோதும் பெறவே முடியாது. நமக்குக் கிடைப்பதெல்லாம் நிழலாகவும், அன்னார் மூலமாகவும் கிடைக்கின்றது.’’

பிறகு இஸ்லாத்தின் உண்மை நிலை என்ன? ஒரு முஸ்லிம் எப்படி இருக்க வேண்டும்? ஒரு முஸ்லிமை இறைநெருக்கம் எந்த தகுதி வரை சென்றடைய வைக்க வேண்டும்? என்பதைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

‘‘இஸ்லாத்தின் உண்மை நிலை என்ன? அது, **பலியிடப்படும் ஆட்டைப் போன்று இறைவனுக்கு முன்னால் தன் கழுத்தை வைத்து விடுவதாகும்.** மேலும் தனது எல்லா எண்ணங்களையும் விட்டு விடுதல்.இறைவனின் விருப்பத்தில் மூழ்கி விடுதல் ஆகும். மேலும் இறைவனிடத்தில் தன்னை இழந்தவாறு **தன்னிடத்தில் ஒரு மரணத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல்.** மேலும் அவனுடைய சொந்த அன்பின் மூலமாக முழுமையான பண்பைப் பெற்று வேறு எந்த நோக்கமுமின்றி, அன்பின் தூண்டுதலினால் அவனுக்குக் கட்டுப்படுதல். மேலும் அவனுடனேயே பார்க்கும் கண்களைப் பெறுவதும், அவனுடனேயே கேட்கும் காதுகளைப் பெறுவதும், அவன் பக்கமே முழுவதுமாக குனிந்திருக்கும் உள்ளத்தை உருவாக்குவதும் அவன் பேசச் சொல்வதனாலேயே பேசும் நாவைப் பெறுவதும் ஆகும். **இது எத்தகைய தகுதி என்றால், இதில் இறைவனை அடையும் எல்லா முயற்சிகளும் நிறைவை அடைந்து விடுகின்றன.** மேலும் மனித ஆற்றல்கள் தனது பொறுப்பின் எல்லா பணிகளையும் செய்து முடித்து விடுகின்றன.’’

பிறகு இஸ்திக்ஃபாரின் இரண்டு வகைகளை விளக்கியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

‘‘ எந்த இஸ்திக்ஃபாரின் மூலமாக ஈமானின் வேர்கள் உறுதியடைகின்றனவோ அது **இரண்டு** பொருளில் திருக்குர்ஆனில் வந்துள்ளது. **ஒன்று**, தனது உள்ளத்தை இறையன்பில் தோய்த்தவாறு தனிமையில் இருக்கும் நிலையில் எழுகின்ற பாவங்களின் வெளிப்பாட்டை இறை தொடர்பினால் தடுத்தல். மேலும் இறைவனிடத்தில் இணைந்து அவனிடத்தில் உதவி கோருதல். **இந்த வகை இஸ்திக்ஃபார் என்பது இறைநெருக்கத்தைப் பெற்றவர்களுக்கு**உரியதாகும்.**இரண்டாம் வகை இஸ்திக்ஃபார்** என்பது பாவத்திலிருந்து வெளியேறி இறைவன் பக்கம் ஓடுவதும், மரம் நிலத்துடன் வேரூன்றி விடுவதைப் போன்று, உள்ளம் தூய்மையான முறையில் வளர்ச்சியடைந்து காய்ந்து போதல் மற்றும் பாவம் எனும் அழிவிலிருந்து தப்பிப்பதற்காக, இறையன்பிற்கு கைதியாகிவிடும் அளவுக்கு முயற்சிசெய்வதும் ஆகும். இவ்விரண்டு நிலைகளுக்கும் இஸ்திக்ஃபார் என பெயர் வைக்கப்பட்டுள்ளது.’’

இறைநெருக்கத்திற்கான படித்தரங்களை விளக்கியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

‘‘இறைநெருக்கம் மற்றும் இறைதொடர்பின்படித்தரங்கள் பல வகைப்பட்டதாகும். எனவே ஒருவர் இறைநெருக்கத்தைக் கொண்டவராக இருந்தாலும் இறைநெருக்கத்தின் அந்தஸ்திலும், இறையன்பின் அந்தஸ்திலும் அவரை விட மேலானவரை எதிர்க்கின்றார் என்றால் அதன் விளைவாக இறைநெருக்கத்தில் குறைவாக இருக்கின்ற நபர் மூஸா (அலை) அவர்களுக்கு எதிராக இருந்த பல்அம் பாவூருக்கு ஏற்பட்டதைப் போன்று நாசமாகிப் போவது மட்டுமின்றி ஈமானை இழந்த நிலையில் மரணிக்கின்றார்.’’

பிறகு இறைநெருக்கத்திற்கான காரணியான துஆவைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''துஆவிற்கான உதாரணம் ஓர் இன்பமான நீரூற்றைப் போன்றதாகும். அதில் ஓர் இறைநம்பிக்கையாளர் அமர்ந்திருக்கிறார். அவர், தான் விரும்பும்போது அந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்த முடியும். **ஒரு மீன் தண்ணீரின்றி உயிர் வாழ முடியாததைப் போன்று இறைநம்பிக்கையாளரின் தண்ணீர் துஆவாகும். அது இல்லாமல் அவர் உயிர் வாழ முடியாது. அந்த துஆவிற்கான சரியான இடம் தொழுகையாகும்.''**

பிறகு ஆவிற்கான சரியான இடம் தொழுகையாகும். அதுவே உண்மையில் சரியான துஆவாக இருக்க முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''அதில் இறைநம்பிக்கை கொண்டவருக்கு அப்படிப்பட்ட சுகமும், இன்பமும் கிடைக்கிறது. அதற்கு எதிரில் ஆடம்பரமான ஒருவரின் ஏதாவதோர் அநாகரிகச் செயலிலும் முழுமையான இன்பம் கிடைப்பது ஒன்றுமற்றதாகும். துஆவினால் கிடைக்கின்ற பெரிய விஷயம் இறைநெருக்கமாகும். துஆவின் மூலமாகவே மனிதன் இறைவனுக்கு நெருக்கமானவன் ஆகின்றான். அவனை தன் பக்கம் ஈர்க்கின்றான்.''

எனவே இறைநெருக்கத்தைப் பெறுவதற்கு தொழுகைகளை நிறைவேற்றுவதும் அவசியமானதாகும். பிறகு இறைநெருக்கத்தை பெறுவதற்கு பொதுவாக நற்செயல்களின் பக்கம் கவனமூட்டியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நற்செயல் மிகப் பெரும் இறையருளாகும். கருணையுள்ள இறைவன் நற்செயலினால் திருப்தி கொண்டுவிடுகிறான். மேலும் இதனால் இறைநெருக்கம் கிடைக்கிறது. ஆனால் மதுவின் கடைசி முடக்கில் போதை இருப்பதைப் போன்று நற்செயலின் அருள்கள் அதன் கடைசி நன்மையில் மறைந்திருக்கிறது. எவர் நற்செயலை அதன் முழுமை வரை எட்ட வைக்கின்றாரோ அவர் அந்த அருள்களிலிருந்து பயன்பெற்று விடுகின்றார். ஆனால் எவர் ஒவ்வொரு நற்செயலையும் இடையில் விட்டு விடுகிறாரோ அதனை அதன் முழுமையான நோக்கம் வரை எட்ட வைப்பதில்லையோ அவர் அந்த அருள்களிலிருந்து விலகி இருக்கிறார். **அல்லாஹ்வின் நெருக்கம் கிடைப்பதில்தான் மனிதனின் கண்ணியம் இருக்கிறது.** மேலும் இதுதான் மிகப் பெரிய செல்வமும் இறையருளும் ஆகும். அவர் இறைவனுடைய நெருக்கத்தைப் பெற்றவராகி விடும்போது அல்லாஹ் ஆயிரக்கணக்கான அருள்களை அவர் மீது இறக்குகின்றான். வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் அவர் மீது அருள்கள் இறங்குகின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அழிப்பதற்காக குரைஷிகள் எந்த அளவுக்கு முயற்சி செய்தனர். அவர்கள் ஒரு சமுதாயமாக இருந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ தன்னந்தனியாக இருந்தார்கள். ஆனால் பாருங்கள் யார் வெற்றி பெற்றார்? யார் தோல்வியுற்றார்? **(இறை ) உதவியும், ஆதரவும் இறை நெருக்கத்திற்கான மிகப் பெரிய அடையாளமாகும்.''**

பிறகு இறைநெருக்கத்தின் உயர் தகுதியை அடைவதன் பக்கம் கவமூட்டியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இறை சாபத்திற்கு மிகவும் அஞ்சுங்கள். அவன் பரிசுத்தமானவனும் தன்மான உணர்வுள்ளவனும் ஆவான். தீய செயல் செய்பவர் இறைநெருக்கத்தைப் பெற முடியாது. ஆணவம் கொண்டவர் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. உலகத்தில் மீது நாய்களைப் போன்றும், எறும்புகளைப் போன்றும், கழுகுகளைப் போன்றும் வீழ்கின்றவர்களும், உலக ஆசைகொண்டிருப்பவர்களும் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. ஒவ்வோர் அசுத்தமான கண்ணும் அவனை விட்டும் தூரமானதாகும். ஒவ்வோர் அசுத்தமான உள்ளமும் அவனை அறியாதிருக்கிறது. **அவனுக்காக நெருப்பில் இருப்பவர்கள் நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். அவனுக்காக அழுபவர்கள் சிரிப்பார்கள்.** அவனுக்காக உலகத்தை விடுபவர்களுக்கு அது கிடைக்கும். நீங்கள் உண்மையான உள்ளத்துடனும், முழுமையான உண்மையுடனும், சுறுசுறுப்பாக காலெடுத்து வைத்தவாறும் இறைவனுக்கு நண்பனாகிவிட்டால் அவனும் உங்களின் நண்பனாகி விடுவான். நீங்கள் உங்களின் கீழ் உள்ளவர்கள், உங்கள் மனைவியர்கள், உங்கள் ஏழை சகோதரர்கள் ஆகியோரின் மீது கருணை காட்டுங்கள்; அப்போது

வானத்தில் உங்கள் மீதும் கருணை காட்டப்படும். நீங்கள் உண்மையாகவே அவனுக்காக ஆகிவிடுங்கள்; அவனும் உங்களுக்காக ஆகிவிடுவான்.''

பிறகு இறைவன் தன் நெருக்கத்தைப் பெற்றவர்களுக்காக எவ்வாறு தனது தன்மான உணர்வை வெளிப்படுத்துகிறான்? எதிரிகளை எவ்வாறு அழிக்கின்றான்? என்பதைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''எனவே(இறைநெருக்கம் கொண்டவர்களை) அவமானப்படுத்துவதும், துன்பப்படுத்துவதும் தனது எல்லையை எட்டிவிடும்போது, இறை நாட்டத்தில் இருந்த சோதனை நடந்து விடும்போது இறைவனின் தன்மான உணர்வு அவனது நண்பர்களுக்காக பொங்கி எழுகிறது. மேலும் இறைவன் அவர்களை நோக்கிப் பார்க்கின்றான். அவர்களை அநீதிக்குள்ளானவர்களாகக் காண்கிறான். அவர்கள் கொடுமை இழைக்கப்பட்டதையும், ஏசப்பட்டதையும், அநியாயமாக காஃபிர் எனக் கூறப்பட்டதையும், அநீதி இழைப்பவர்களின் கைகளினால் துக்கம் கொடுக்கப்பட்டதையும் பார்க்கின்றான். அப்போது இறைவன் அவர்களுக்காக தனது நடைமுறையை நிறைவேற்றுவதற்காகவும், தனது கருணையை காட்டுவதற்காகவும், தனது நல்லடியார்களுக்கு உதவி செய்வதற்காகவும் எழுகின்றான். அவர்கள் முழுமையாக இறைவன் பக்கம் கவனம் செலுத்துவதற்காகவும், காலையும் மாலையும் அவனிடத்தில் மன்றாடுவதற்காகவும் அவ்வாறு செய்கின்றான். இவ்வாறே அவனுடைய நெருக்கம் பெற்றவர்களுக்காக அவனுடைய நடைமுறை இருந்து வருகின்றது. எனவே கடைசியில் அவர்களுக்காக செல்வமும் உதவியும் இருக்கிறது. மேலும் இறைவன் அவர்களுடைய எதிரிகளுக்கு சிங்கங்களின், சிறுத்தைகளின் உணவை வழங்குகிறான். அவ்வாறே **மனத்தூய்மை கொண்டவர்கள் வீணாக்கப்படமாட்டார்கள். அவர்களுக்கு அருள்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் அற்பமாகப் படமாட்டார்கள்.** கண்ணியப்படுத்தப்படுகிறார்கள். இதுவே மனத்தூய்மை கொண்டவர்களிடத்தில் அல்லாஹ்வின் நடைமுறையாக தொடர்ந்து இருந்து வருகிறது.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் அல்லாஹ்வின் இந்த நடைமுறையை நாம் கண்டோம் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் எதிரிகளை இறைவன் அவமானத்திற்குள்ளாக்கினான். ஒருமுறை இரண்டு முறை அல்ல; பல முறை பல்வேறு இடங்களில், பல்வேறு நாடுகளில் அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு இழிவும், அவமானமும், அழிவும் ஏற்பட்டதை நாம் கண்டோம். இன்றும் நாம் இந்தக் காட்சிகளைக் கண்டு கொண்டிருக்கிறோம். எனவே நான் மீண்டும் ஒருமுறை ஜமாஅத் உறுப்பினர்களுக்கு - குறிப்பாக பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு எதிராக அல்லாஹ்வின் தடி விழும்; கண்டிப்பாக விழும் - இன்ஷா அல்லாஹ். சிறிய அளவில் நாம் இதனை கண்டும் வருகிறோம். ஆனால் இந்தக் காட்சியை பரந்த அளவில் சீக்கிரம் நாம் பார்க்க வேண்டுமென்றால், பாகிஸ்தானில் வாழ்கின்ற ஒவ்வோர் அஹ்மதியும், பாகிஸ்தானுடன் தொடர்புடைய ஒவ்வோர் அஹ்மதியும் இறைநெருக்கத்திலும், இறையன்பிலும் மேலும் முன்னேற வேண்டிய தேவை இருக்கிறது. எனவே உலகத்தை புறந்தள்ளிவிட்டு இறைவனுக்கு மிக நெருக்கமாக முன்னேறிக் கொண்டிருங்கள். இந்தக் காட்சியை நாம் சீக்கிரம் காணும் வகையில் நாம் முன்னேறிக்கொண்டிருப்பதில் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். ஷய்த்தானின் ஆட்சி சீக்கிரம் முடிவுக்கு வருவதற்காகவும், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றவர்களின் ஆட்சி உலகில் நிலைபெறுவதற்காகவும் உலகிலுள்ள அஹ்மதிகள் குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் நமக்கு அந்த துஆக்களை செய்வதற்கான நல்வாய்ப்பையும், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்ற மக்களைச் சேர்ந்தவர்களாகும் நல்வாய்ப்பையும் வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***